**20.04.2026 <u>அசல் வழக்கு எண்.96/2012</u> Starting Time : 3.15p.m.**

**<u>வா.சா.2</u> திரு.பெருமாள் த/பெ. முனுசாமி**

**<u>சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு, பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**1).** எனக்கு என்ன வயது ஆகிறது என்றால் 53 வயது ஆகும். இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்துக்கள் ஆறுமுகம் என்பவருக்கு பாகமாக வந்த சொத்துக்கள் என்றால் சரிதான். அவருக்கு பாகம் வருவதற்கு முன்பு பூர்வீக சொத்துக்கள் இருந்தது என்றால் சரிதான். எந்த வருடம் பாகம் செய்துக் கொண்டார்கள் என்றால் பாகப்பிரிவினை செய்துக் கொண்டது எனக்கு தெரியாது. ஊரில் நில உடமை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பட்டா வழங்கப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அதன் அடிப்படையில் ஆறுமுகம் என்பவர் பெயருக்கு பட்டா கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். ஆறுமுகம் தான் சொத்துக்களை 60 ஆண்டுகளாக அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான்.

**2).** தற்போது ஜெயந்தி என்பவர் பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். அவர் தான் சொத்துக்களை பயிர் செய்து வருகிறார் என்றால் சரிதான். வழக்குச் சொத்துக்கள் தற்போது விவசாய நிலமா அல்லது வீட்டு மனையா என்றால் விவசாய நிலம் ஆகும். எனக்கு 1ம் வாதி வீரராகவன் எனக்கு என்ன உறவு முறை என்றால் சித்தப்பா ஆவார். எனக்கும் பிரதிவாதிகளுக்கும் விரோதம் உண்டு என்றால் அவ்வாறு ஏதும் இல்லை. நான் வாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது முதன்மை பிரமாண வாக்குமூலத்தில் நான் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் தவறானது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**

**Ending time : 3.22 p.m.**

Taken down by me in Open court read over to the witness in the presence of the Plaintiff/Defendant and admitted by him/her to be correct. **Sd/-C. Mahalakshmi,**
**District Munsif,**
**Vandavasi.**